**உங்களினதும் சகலரினதும் பாதுகாப்புக் கருதி அரசினால் வழங்கப்படும் முன்னெச்சரிக்கைக்கமைய 24 மணித்தியாலத்திற்கு முன்பாக வெளியேறுதலுக்கான கட்டாய வேண்டுகோள் பிறப்பிக்கப்படும். அவ்வாறான வேண்டுகோள்கள் உங்களினதும் ஏனையோர்களினதும் பாதுகாப்பு நலன் கருதியேயாகும். தாமதிக்காமல் இவ் அனர்த்த முன்னெச்சரிக்கை செவிசாய்த்து பின்பற்றுதல் வேண்டும்.**

- உங்களுக்கு மற்றும் குடும்ப அங்கத்தவர்களுக்கு ஏற்கனவே குறித்துரைக்கப்பட்ட பாதுகாப்பு நிலையங்கள் பற்றி முன்னதாகவே அறிந்திருத்தல் வேண்டும். சில நேரங்களில் அவ்விடங்களை அண்மிப்பதற்கு அதிக நேரம் செலவாகக் கூடும். ஆதலால் பாதுகாப்பு நிலையத்தினை அடைவதற்கு தேவையான நேரம் பற்றி அறிந்திருத்தல் வேண்டும்.
- தொடரச்சியாக உங்கள் பிரதேசத்தின் பொறுப்பு வாய்ந்தவர்களின் அறிவுரைகளுக்கு ஏற்ப செயற்படவும். (உதாரணம்: பிரதேச செயலாளர், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப்பணிப்பாளர், முப்படையினர், பொலிஸ் உத்தியோகத்தர்கள்)

## எங்கே செல்லவேண்டும்? என்ன நேரத்திற்கு செல்லவேண்டும்? போன்றவற்றிற்கு முன் ஆயத்தம் அவசியமாகும்.



- சரீர இடைவெளியை பேணக்கூடிய உங்களுக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பு நிலையங்களுக்கு செல்ல முன்னதாகவே ஆயத்தங்களை செய்தல் வேண்டும்.
- உங்களினது குடும்பம் கூட்டாக(கொத்தாக) வீட்டை விட்டு வெளியேற வேண்டும் என்பதுடன் ஒவ்வொருவருக்குமிடையில் சமுக இடைவெளிக்கான தூரத்தினை பேணுதல் வேண்டும். இச்செயற்பாடு கொரோனா வைரஸ் பரவுவதனைக் கட்டுப்படுத்த ஆதாரமாக அமையும்.

## அனர்த்தப் பொதியுடன் மேலதிகமாக கொண்டு செல்ல வேண்டிய பொருட்கள்



பாதுகாப்பு நிலையத்திற்குச் செல்லும் போது தங்களுடைய தனிப்பட்ட பாவனைக்காக உணவுத்தட்டு, கோப்பை, சவர்க்காரம் மற்றும் ஏனைய சுத்திகரிப்பு பொருட்கள், முகக்கவசம், துவாய் போன்றவற்றை எடுத்துக் கொண்டு செல்லவும்.

## பாதுகாப்பு நிலையங்களுக்குள் பிரவேசிக்கும் முன்பாக



- நீங்கள் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டு காய்ச்சல், தடிமல் போன்றவற்றினால் பாதிக்கப்பட்டவர் என்றால் உங்களுடைய பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அல்லது வேறு தொடர்புபட்ட உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தி ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.
- முகாமிற்குள் பிரவேசிக்க முன்பு உங்களுடைய சுகாதார நிலையைப் பற்றி முகாமில் காணப்படும் முகாமைத்துவத்திற்கு மறைக்காமல் தெரியப்படுத்துங்கள். இது உங்களுடைய மற்றும் ஏனையோரின் பாதுகாப்பையும் உறுதி செய்யும்.

## பெண்கள் மற்றும் சிறுவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்.



- பெண்கள் மற்றும் சிறுவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக குடும்பங்கள் கூட்டாக (கொத்தாக) பாதுகாப்பு நிலையங்களை நோக்கிச் செல்லலாம்.
- முகாமிற்குள் ஒரு குடும்பம் ஒரு கொத்தாக காணப்பட முடியும். ஒவ்வொரு கொத்திற்கும் இடையில் ஒரு மீற்றர் இடைவெளி காணப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். பாதுகாப்பு நிலையத்திற்குள் அலைந்து திரிவதைக் குறைத்துக் கொள்ளுங்கள்.

## உணவு மற்றும் நீர் வழங்கல்





- முகாம்களுக்கு வருவது கடினமென்றால், உணவு மற்றும் நீர் வழங்கல், கூட்டாக உணவு தயாரித்தல், மழை நீர்சேகரித்தல் போன்ற நடவடிக்கைகள் செயற்படுத்தப்படும் போது அவ்வாறான செயற்பாடுகளுக்கு உதவி செய்யுங்கள்.
- கூட்டாக உணவை தயாரிக்கும் பொழுது முகக்கவசத்தையும் கையுறையையும் பயன்படுத்துங்கள்.
- கூட்டாக உணவை ஆயத்தம் செய்தல், தயாரித்தல், பரிமாறுதல் போன்ற செயற்பாடுகளின் போது உங்களுடைய கைகளை கழுவுங்கள்.
- எப்போதும் உணவுகளை நன்றாக சமையுங்கள் சூடாக பரிமாறுங்கள்.
- உணவினை பெற்றுக்கொள்ளும் போது நெரிசலுக்கு ஆளாகாமல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள்.
- பயன்படுத்திய முகக்கவசம் மற்றும் கையுறையை மூடியுள்ள அதற்காகவே தனியாக வைக்கப்பட்டுள்ள குப்பைக்கூடையில் வீசிவிடுங்கள். அது தொடர்பாக பாதுகாப்பு நிலைய முகாமைத்துவக்குழுவிடம் அறிந்து கொள்ளவும்.

## கழிவறையைப் பயன்படுத்தல்



- கழிவறையைப் பயன் படுத்தும் பொழுது நெரிசல் இல்லாமல் ஒருவரிசையை ஏற்படுத்துங்கள்.
- கழிப்பறைகளைப் பயன்படுத்த முன்பும் பின்பும் கைகளை நன்கு சவர்க்காரம் இட்டுக்கழுவவும்.
- சிறு பிள்ளைகளின் கழிவு மற்றும் சிறுநீர் ஆகியன பாதுகாப்பாக சுத்தம் செய்யவும். அதுபற்றி பாதுகாப்பு நிலைய முகாமைத்துவக் குழுவிடம் அறிந்து கொள்ளவும்.
- பாதுகாப்பு நிலையங்களுக்குள் எச்சில் துப்புவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். பாதிக்கப்பட்டவரின் எச்சிலினூடாக வைரஸானது பரவக்கூடிய சாத்தியமுள்ளது

**புலம்பெயர்ந்த மக்களின் வாழ்வில் மேலும் பேரழிவை ஏற்படுத்தும்**

கோவிட்-19 நோய்த் தாக்கங்கள் மற்றும் தொற்றாளர்கள் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்கிறது. புலம் பெயர்தலுக்கான சர்வதேச அமைப்பானது மனித புலம்பெயர்வு வடிவங்களில் காலநிலை மற்றும் பேரழிவு கையாளுதலுடன் தொடர்புடைய கொள்கைகள் மற்றும் செயற்திட்டங்களில் இலங்கை அரசாங்கத்திற்கு உதவுகின்றது

அச்சிடுவதற்கான பங்களிப்பு :
இடம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு

IOM UN MIGRATION | IOM DEVELOPMENT FUND

**அவசர அழைப்பிற்கு : 117**

**அனர்த்த முகாமைத்துவ நிலையம்**

120/2, வித்யா மாவத்தை, கொழும்பு 07
தொலைபேசி : +94 112 136 136
தொலைநகல் : +94 112 670 025
மின்னஞ்சல் : eoc@dmc.gov.lk, eocdmc@gmail.com
இணையத்தளம் : www.dmc.gov.lk

**தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம்**

வித்யா மாவத்தை, கொழும்பு 07
தொலைபேசி : +94 11 266 5258
தொலைநகல் : +94 11 266 5702
மின்னஞ்சல் : sahana.ndrsc@gmail.com
இணையத்தளம் : www.ndrsc.gov.lk

# சீரற்ற காலநிலை காரணமாக பாதுகாப்பு நிலையங்களுக்குச் செல்ல நேரிட்டால் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து பாதுகாத்துக்கொள்ளுவோம்.

சுகாதார மற்றும் சுதேச வைத்திய சேவைகள் அமைச்சு

DMC
அனர்த்த முகாமைத்துவ நிலையம்

தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம்